மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரை. நாளைக்குத் தொடர்கிறீர்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் கடந்துவிட்டதன் காரணமாகவும், கடும்பசி ஏற்பட்டுவிட்டதன் காரணமாகவும் பதிலுரையை நாளைக் காலை வைத்தால்தான் எல்லோரும் அமைதியாகவும் கேட்பார்கள், நிதானமாகவும் கேட்பார்கள், முறையோடும் கேட்பார்கள் என்ற காரணத்தினால் நாளைக் காலை வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29—4—1993) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 2.44 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

199. சென்னை, உம்மிடி நந்தகோபால் டிரஸ்ட்டினால் விற்பனை செய்யப்பட்ட ஏழு வெள்ளி யிலான நேரு விளையாட்டு அரங்கம் உருவமைப்புடன் கூடிய நினைவு பரிசாக 18—1—1993 அன்று நேரு விளையாட்டு அரங்கம் திறக்கப்பட்டபோது முக்கிய நபர்களுக்கு வழங்கப்பட்டதற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—2—1993 ஆம் நாளிட்ட 39 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

200. தூத்துக்குடி, இந்து மிஷன் மருத்துவமனைக்கு எந்த ஒரு விற்பனையாளராலும் விற்கப்படும் மருந்துகள் மற்றும் தளவாடங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள்

துறையின் 13—11—1992 ஆம் நாளிட்ட 402 ஆம் எண் அரசாணையில் வெளியிட்டப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

201. சென்னை மாநகரிலும் ஏனைய இடங்களிலும் காவல் துறையினர் சட்ட விரோதமாகக் கைது செய்தது குறித்து 31—8—1992 அன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்களில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதிபதி வி. காலித் விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணை குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

202. சென்னை கால் நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் பல்லவன் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்குமிடையே வாய்ச் சண்டை ஏற்பட்டதற்கான காரணங்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் குறித்தும் அதனையடுத்து 25—10—1991 அன்று காவலர் நடவடிக்கை எடுத்ததற்குக் காரணமாயிருந்த நிகழ்ச்சிகள் குறித்தும் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட திரு. பி. கிருஷ்ணசாமி விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணை குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3 (4)-பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

256. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஏழாவது அறிக்கை, 1992-93.

257. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எட்டாவது அறிக்கை, 1992-93.

258. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஒன்பதாவது அறிக்கை, 1992-93.

259. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பத்தாவது அறிக்கை, 1992-93.